**2025**
**மாச்சு**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரிப்பு மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டுக்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 மாச்சில் குறிப்பிடத்தக்க விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2025 மாச்சில் 63.9 பெறுமதியினை அடைந்து, நான்கு ஆண்டுகளில் அதன் அதி கூடிய பெறுமதியினைப் பதிவுசெய்தது.** தயாரிப்பு நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினைப் பிரதிபலித்து மாதத்திற்கு மாத விரிவடைதலைப் பதிவிட்ட அனைத்துத் துணைச் சுட்டெண்களும் வலுவான பருவகாலக் கேள்வியினால் தூண்டப்பட்டிருந்தன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தித் துணைச் சுட்டெண்களில் குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்கள், புடவை மற்றும் அணியும் ஆடைத் தயாரித்தல் துறைகளினுள் சடுதியான அதிகரிப்புக்கள் ஒட்டுமொத்த சுட்டெண் வளர்ச்சிக்குப் பிரதானமாக பங்களித்திருந்தன. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் அதிகரிப்புகளுக்கு இசைவாக மாத காலப்பகுதியில் தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளில் இருப்பு என்பனவும் விரிவடைதல்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மாச்சில் நீட்சியடைந்து காணப்பட்டது.

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*


| மாறி | பெப் | மாச்சு | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **56.8** | **63.9** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 60.5 | 71.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 53.0 | 70.2 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 57.0 | 51.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 55.0 | 62.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.6 | 56.3 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்பட்டன. எனினும், பல நிறுவனங்கள் விசேடமாக ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட தயாரிப்பாளர்கள் உலக வர்த்தகத்தில் அதிகரிக்கின்ற நிச்சயமின்மை பற்றி கவலையடைந்துள்ளனர்.

**தயாரிப்பு கொ.மு.சு 63.9**
**2025 மாச்சு**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகளாவிய தோற்றப்பாடு:
**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய அமெரிக்கா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 ஏப்பிறல் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 2025 மாச்சில் 69.8 பெறுமதியைப் பதிவுசெய்து பணிகள் நடவடிக்கைகளில் கணிசமான விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

அநேகமான துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் துணையளிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் கணிசமானளவு விரிவடைந்தன. அதற்கமைய, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் என்பவற்றுடன் தொடர்புடைய வியாபார நடவடிக்கைகள் பண்டிகைக் காலக் கேள்வியினால் தூண்டப்பட்டு குறிப்பிடத்தக்களவு விரிவடைதலைக் காண்பித்தன. மேலும், அதிகரித்த கடன்வழங்கல் காரணமாக நிதியியல் பணிகளின் வியாபார நடவடிக்கைகளும் தொடர்ந்தும் மேம்பட்டன. மேலும், தொழில்சார் பணிகள், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம், காப்புறுதி என்பன தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளும் மாத காலப்பகுதியில் மேம்பாடுகளை எடுத்துக்காட்டின.

புதிய வியாபாரங்கள் 2025 மாச்சில் அதிகரித்தன, நிதியியல் பணிகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், ஏனைய தனிப்பட்ட பணிகள், காப்புறுதி, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் என்பன தொடர்புபட்ட நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் இதற்கு முதன்மைக் காரணமாக அமைந்தன.

பண்டிகைப் பருவகாலத்தின் நோக்கில் பல கம்பனிகளுக்கிடையில் இடம்பெற்ற புதிய ஆட்சேர்ப்புகளின் காரணமாக தொழில்நிலை தொடர்ந்தும் அதிகரித்தது. அதேவேளை, நிலுவையிலிருந்த பணிகள் 2025 மாச்சில் மெதுவான வீதமாயினும் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | பெப் | மாச்சு | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **56.5** | **69.8** | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 58.5 | 68.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 59.6 | 61.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 45.6 | 48.4 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 81.3 | 73.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், ஐக்கிய அமெரிக்கா மூலம் விதிக்கப்படும் இறக்குமதி வரிகள் பற்றி நிலவுகின்ற நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் மெதுவான வீதமாயினும் தொடர்ந்தும் மேம்பட்டன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 மாச்சு**
**69.8**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்', 2025 ஏப்பிறல் 16 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.